செ.வெ.எண் : 33/செப்டம்பர் நாள் : 17.09.2019

## இராமநாதபுரம் மாவட்டம்

## திருவாடானை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கிராமங்களில் குடிமராமத்து திட்டப் பணிகள் குறித்து

## மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கொ.வீர ராகவ ராவ்,இ.ஆ.ப., அவர்கள் ஆய்வு.

இராமநாதபுரம் மாவட்டம், திருவாடானை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கிராமங்களில் பொதுப்பணித்துறையின் கீழ் உள்ள கண்மாய்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் புனரமைப்பு பணிகள் மற்றும் பொதுமக்களுக்கான குடிநீர் விநியோகம், சாலை வசதி, தெருவிளக்கு வசதி உள்ளிட்ட அடிப்படை வசதிகள் தொடர்பான திட்டப் பணிகள் குறித்து மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கொ.வீர ராகவ ராவ்,இ.ஆ.ப., அவர்கள் இன்று (17.09.2019) நேரடியாக சென்று ஆய்வு செய்தார்.

இராமநாதபுரம் மாவட்டத்தில் ரூ.37.59 கோடி மதிப்பில் 69 பொதுப்பணித்துறை கண்மாய்களில் அந்தந்த விவசாய பாசனதாரர் நலச்சங்கங்கள் மூலமாகவும், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் சார்பாக ஊராட்சி அளவில் உள்ள 224 சிறுபாசன கண்மாய்கள், 988 ஊரணிகளில் தமிழ்நாடு நீர்வள ஆதார பாதுகாப்பு மற்றும் நீர் மேலாண்மை இயக்கப் பணிகள் திட்டத்தின் கீழ் ரூ. 21.8 கோடி மதிப்பில் குடிமராமத்து திட்டப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அந்த வகையில், திருவாடானை வட்டம், மல்லனூர் கிராமத்திலுள்ள சேனைவயல் கண்மாயில் ரூ.88 இலட்சம் மதிப்பில் குடிமராமத்து திட்டத்தின் கீழ் புனரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இப்பணிகளை இன்றைய தினம் (17.09.2019) மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் நேரிடையாகச் சென்று குடிமராமத்து திட்டப் பணிகளை ஆய்வு செய்தார்.

அதேபோல, ஊரக வளர்ச்சித் துறையின் மூலம் திருவாடானை ஊராட்சி ஒன்றியம், சோழியக்குடி ஊராட்சியிலுள்ள அய்யனார்கோவில் ஊரணியில் ரூ.1 இலட்சம் மதிப்பிலும், முத்துவடுகபட்டிணம் ஊராட்சியிலுள்ள வெட்டுக்குளம் ஊரணியில் ரூ.1 இலட்சம் மதிப்பிலும் மேற்கொள்ளப்பட்டு வரும் புனரமைப்புப் பணிகளையும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வின்போது, பொதுப்பணித்துறை உதவி செயற்பொறியாளர் திரு.எஸ்.கார்த்திகேயன், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் திரு,ஆர்.ராஜேந்திரன், திருமதி.ஸ்டெல்லா, வட்டாட்சியர் திரு.சேகர் மற்றும் அரசு அலுவலர்கள், கிராம பொதுமக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்.**